**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, ஏற்கனவே அப்படி விதிமுறைகள் இருக்கின்றன. குறிப்பிட்ட ஆண்டு வரையில் அதை பாரதீனம் செய்யக்கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் எங்காவது இப்படி இருக்கிறது என்று புகார் சொன்னால் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்படி எல்லா மாவட்டங்களிலும் அரிசனங்களுக்கு மாத்திரம் இல்லாமல், மனைப்பட்டாக்கள் இல்லாத ஏழை எளியவர்களுக்கும் மனைப்பட்டா வழங்கவேண்டுமென்று மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறதே, அதற்கு தீவிர நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இது நிலம் கொடுக்கிற பிரச்னை பற்றியதாகும். வீட்டு மனை பற்றி ஹவுசிங் போர்டு மினிஸ்டரிடத்தில் கேள்வி கேட்க வேண்டும். ஏற்கனவே இந்த மன்றத்தில் தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ரூரல் ஹவுஸ்லெஸ் புவர் மக்களுக்கு உதவி செய்யப் படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பற்றி வீட்டு வசதி வாரியத் தலைவரைக் கேட்டால் ஒரு விவரம் தருவார்கள். இன்று மானியத்தில் கூடத் தெரிவிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

வக்பு வாரியத்தின் கீழுள்ள மகூதிகள்

* 654வின—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வக்பு வாரியத்தின் கண்காணிப்பில் 1972-ம் ஆண்டு முடிய உள்ள மகூதிகள் எத்தனை ?

(இ) அவற்றின் மூலம் வாரியம் பெறும் மொத்த வருவாய் எவ்வளவு ரூபாய் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) 2,235.

(இ) ரூ. 2,28,569.18 (ஓராண்டிற்கு).

**திரு. மா. பா. சாரதி :** தலைவரவர்களே, இந்து சமுதாயத்திற்கும் இஸ்லாமிய சமுதாயத்திற்கு இம்மாதிரி வாரியங்கள் இருப்பது போல், கிருஸ்துவ சமுதாயத்திற்கும் உள்ள அறநிலையங்களைப் பாதுகாக்க இம்மாதிரி வாரியங்கள் எற்படுத்த அரசு முன்வருமா ?

1974 மார்ச் 28]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையைப் பரிசிலிக்கலாம் என்று நான் பதில் சொல்வதற்கு இயலாது.

**டாக்டர் ச. மு. பழனியப்பன் :** இந்த மசூதியின் வருமானம் ரூபாய் இரண்டு லட்சத்து சொச்சம் என்று சொன்னார்கள். வக்ப் சொத்துக்களை தனிப்பட்டவர்கள் எடுத்துச் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலைமையைப் போக்குவதற்கு அந்த ஊரில் இருக்கிற முஸ்லிம் பெருமக்கள் மனு செய்து கொண்டிருந்தபோதிலும், நீண்ட நாட்களாகியும் அதற்கு நட வடிக்கை எடுக்கவில்லை. இதனால் அந்தப் பகுதி மக்களிடம் இந்தக் குறை இருந்து வருகிறது. இதைப் போக்குவதற்கு இந்த அரசு வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நடவடிக்கை எடுக்க கால தாமதம் என்று சொல்வது சரியல்ல. ஒரு நடவடிக்கை எடுக்கும்போது பல்வேறு விதிமுறைகள், சட்டப்பிரச்சினை வந்து விடுகின்றன. அந்தச் சட்டத்தின் துணைகொண்டு அவர்கள் நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். நடவடிக்கை எடுப்பதை தடைசெய்வதற்கு உத்தரவு வாங்கிவிடுகிறார்கள். அந்தத் தடை எடுக்கப்பட பல ஆண்டுகள் ஆகிவிடுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற இடம் எனக்குத் தெரியும். அந்தக் குறிப்பிட்ட பிரச்னை சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஸ்டே வாங்கியிருக்கிறார்கள். அதை ஒன்றும் செய்வதற்கு இல்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, இந்த வக்ப் போர்டுக்கு கிட்டத்தட்ட ரூ. 30 கோடிக்கு பிராப்பர்ட்டி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் வருமானத்தைப் பார்த்தால் மிகவும் குறைவாக இருக்கிறது. இதனால் எங்கேயோ எதிலோ தவறு நடக்கிறது என்று தெரிகிறது. இதை ஆராய்ந்து பார்ப்பதற்கு ஒரு ஹை-பவர் கமிஷன் போடுவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, கமிஷனே வேண்டாம். இருக்கிற வாரியமே அதைக் கவனித்து வருகிறது. சொத்து மதிப்பு 15 கோடி இருக்கலாம். வரக்கூடிய வருமானம் குறைவாகத்தான் வருகிறது. வக்ப் கான்டிரிப்யூஷன் குறைவாகத்தான் வருகிறது. எற் கனவே வந்த வருமானத்தைப் பற்றி குறிப்பு தரப்பட்டிருக்கிறது. இதற்கு மொத்தமாக வந்துள்ள வருமானம் ரூ. 4,17,356.